This version cannot be considered as evidence of this publication.
Final version is available at https://conf.kln.ac.lk/ich/

# புராதன இந்து அரசியலில் ஒற்றாடல் - திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

திருச்செல்வம் கிஸாந்தினி
இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
kishanthiny.t@gmail.com

புராதன இந்து அரசியல் வாழ்வில் ஒற்றாடல் முறையே மனத்துக்கு மிக இன்னாத கூறாக இருந்ததெனலாம். நாடாள்வோர் நாளும் தாம் செய்ய வேண்டிய இன்றியமையாப் பணியாக ஒற்றையாளுதல் (ஒற்றரை ஆளுதல்) அமைகிறது. அரச நிர்வாக சுமூகமான செயற்பாடுகளுக்கும் இராச்சிய விஸ்தரிப்புக்கும் புலனாய்வுக் கட்டமைப்பானது, நாடு தழுவிய ரீதியிலும் நாடு கடந்த நிலையிலும் வலுப்பெற்றிருத்தல் அவசியம் என்பதை மிகச் சிறந்த அரசியற் பனுவலான கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் உட்பட ஏனைய இந்து இலக்கியங்களிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. பிறர்பால் நிகழ்வதை அவரறியாமல் மறைவாகத் தெரிந்து கொள்ளுதல், மாற்று வேடம் தாங்குதல், இரகசியம் காத்தல், ஒற்றியறிந்தனவற்றை ஐயுறாது தெளிதல், ஒற்றன் இன்னான் என அறியப்பட்டு தண்டம் விதித்தாலும் உண்மை உரைக்காமை, ஒற்றியறிதலுக்காக அனுப்பப்படும் ஒற்றனை பிறிதொரு ஒற்றனால் அறிதல் எனப்பல நிலைகளிலும் ''ஒற்றாடல்'' அரசின் மிக முக்கியமானதொரு உறுப்பாக அமைந்திருக்கின்றது. இத்தகு முக்கியத்துவமுடைய அரசியற் புலமான ''ஒற்றாடல்'' குறித்த சிந்தனைகளை திருக்குறளினூடாக வெளிப்படுத்த விளைவதாக இக்கட்டுரை அமைகிறது. புராதன இந்து அரசியற் பனுவல்களில் சிறப்புரைக்கப்பட்ட ஒற்றாடல் பற்றிய சிந்தனைகள் திருக்குறளில் பொதிந்திருக்குமாற்றினை வெளிக்கொணர்தல் என்பதை நோக்கமாகக் கொண்டு, விபரண ஆய்வு முறையியல் மற்றும் உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையியல் ஆகிய ஆய்வு முறையியலுக்கமைவாகவும் சில சந்தர்ப்பங்களில் ஒப்பீட்டு முறையியலும் பயன்படுத்தப்பட்டு இவ்வாய்வுக் கட்டுரையானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. புராதன இந்து அரசியற் பனுவலான அர்த்தசாஸ்திரம் முதலான நூல்களில் சொல்லப்பட்ட ஒற்றாடல் குறித்த செய்திகளைத் திருக்குறள் உள்வாங்கி இருக்கிறது என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும். அரசின் ஸ்திரத்தன்மைக்கு புலனாய்வு வலைப்பின்னல் முக்கிய அங்கமாகும். இது குறித்த சிந்தனைகள் திருக்குறளில் சொல்லப்பட்டதானது புராதன இந்து அரசியல் செல்நெறியே என்பது குறித்த ஆராய்ச்சியே, இவ்வாய்வின் ஆய்வுப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** அர்த்தசாஸ்திரம், இந்து அரசியல், ஒற்றன், ஒற்றாடல், திருக்குறள், புலனாய்வு வலைப்பின்னல்

Preliminary Version